11 OCT 2014
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## புவியியல்துறை, கலை கலாசார பீடம்

## மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2009/2010 (Sept./Oct. 2014)

| GEOS 3104: குடித்தொகைப் புவியியல் (Population Geography) | நேரம் 03 மணித்தியாலங்கள் |
|---|---|

- பகுதி-I இல் இருந்து இரு வினாக்களையும், பகுதி-II இல் இருந்து இரு வினாக்களையும் தேர்ந்தெடுத்து எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

### பகுதி – I

1) குடித்தொகைக் கணிப்பீட்டு வழிமுறைகளை பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.

a. குடிக்கணிப்புப் பெறுவதில் டீபக்ரோ, டீயூரோ முறைகள்.
(06 புள்ளிகள்)

b. இலங்கையின் குடிக்கணிப்பின் படிமுறை வளர்ச்சி
(07 புள்ளிகள்)

c. 1981, 2012 ஆம் ஆண்டுக் கணிப்புக்களில் குடித்தொகை வேறுபாடு, குடித்தொகைக் கூட்டு, குடித்தொகை இயக்கம் ஆகியவற்றில் காணப்படக்கூடிய பண்புகள்.
(12 புள்ளிகள்)

2) 1981, 2012 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்புக்களின் பிரகாரம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அடிப்படையில் பால் விகிதாசாரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை
இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவட்ட அடிப்படையிலான பால்நிலை விகிதாசாரம் 1981, 2012 (100 பெண்களுக்கு)

| மாவட்டம் | 1981 | 2012 |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 96.8 | 89.5 |
| மன்னார் | 114.6 | 101.8 |
| வவுனியா | 113.9 | 97.8 |
| முல்லைத்தீவு | 123.3 | 100.9 |
| கிளிநொச்சி | 114.0 | 97.3 |
| மட்டக்களப்பு | 103.0 | 91.4 |
| அம்பாறை | 109.9 | 95.5 |
| திருகோணமலை | 115.9 | 98.2 |
| இலங்கை | 104.0 | 94.3 |

ஆதாரம்: குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 1981, 2012

a. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பால் விகிதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கான காரணிகளைத் தருக.

(09 புள்ளிகள்)

b. இத்தகைய மாற்றங்கள் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய சமூக, பொருளாதார பண்பாட்டு விளைவுகளைத் தருக.

(09 புள்ளிகள்)

c. எதிர்காலத்தில் தேசிய ரீதியில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் யாவை?

(07 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புரை தருக.

a. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம்.

b. ஆபிரிக்காவில் எபோலா வைரஸ் (Ebola virus).

c. வேறுபட்ட குடித்தொகைப் பிரமிட்டுக் கட்டமைப்புகள்.

(12½ x2 = 25 புள்ளிகள்)

## பகுதி – II

4) கருவளம், இறப்புக்கள் ஆகியவற்றினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்களைத் தந்து அவற்றின் குறைநிறைகளை வெளிக்கொணர்க.

(25 புள்ளிகள்)

5) "வளர்முக நாடுகளில் குடித்தொகை வளர்ச்சியிலும் பார்க்க குடித்தொகையுடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகளே 21 ஆம் நூற்றாண்டில் சவாலாக அமைந்துள்ளது" ஆராய்க.

(25 புள்ளிகள்)

6) கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் குடிப்புள்ளியியல் பண்புகளை நுணுகி ஆராய்க.

(25 புள்ளிகள்)